## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை - 2017

---

தேசிய மருந்துகள் ஒழங்குபடுத்தல் அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை 2018 ஒக்தோபர் 15 திகதி அதிகார சபையின் தலைவருக்கு சமர்பிக்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 113 ஆம் பந்தியின் பிரகாரம், சரக்கிருப்பு, குறுகிய கால முதலீடுகள், வருமான வரிக்கான ஏற்பாடு, செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி , செலுத்த வேண்டிய முத்திரை வரி, நிதி நிலைமை கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி பண அனுப்புதல்கலுக்கான ஏற்பாடுகள், உள்ளடக்கப்பட்ட ஏனைய வருமானம் போன்ற உருப்படிகளுக்கான குறிப்புக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 117 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு தேவையான குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்ற போதிலும், தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் அதிகார சபையால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகின்ற போது மீண்டெழும் செலவுகளுக்கான அரச மானியம் பெறப்படவில்லை என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ஆய்வுகூட பரிசோதனை கட்டணங்கள் ரூபா 2,913,051 தொகை மற்றும் உரிமக்கட்டணம் ரூபா 217,672 தொகை என்பன மீளாய்வவாண்டிற்கான வருமானம் என கருதி கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய மருந்துப்பொருட்களின் பதிவிலிருந்தான வருமானம் மற்றும் மருத்துவ உபகரணங்களின் செயலாக்க கட்டணங்கள் என்பன முறையே ரூபா 3,078,000 மற்றும் ரூபா 489,846 தொகைகளால் கணக்குகளில் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வவாண்டிற்கான வருமான வரி மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரிப்பொறுப்பு என்பன ரூபா 2,723,519 தொகையால் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் பெறுமதி 106,949,434 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி சேர் வரியின் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 105,462,594 ஆக கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட முத்திரை கட்டணங்கள் ரூபா 31,201,280 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா 36,111,233 கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகளுக்கும், மருத்துவ உபகரண இறக்குமதி கட்டணங்களின் வருமானம் மற்றும் நல்ல உற்பத்தி நடைமுறையின்(உள்நாடு) சோதனை கட்டணங்களுடன் தொடர்புடைய அட்டவணைகளுக்கும் இடையே முறையே ரூபா 310,800 மற்றும் 46,473 வேறுபாடுகள் காணப்பட்டன.

**2.2.4 கணக்காய்விக்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டுடிற்கான நிதிக்கூற்றுக்களின பிரகாரம் ரூபா 85,643,656 தொகையான பெறப்பட்ட முற்பணம் தொடர்பான அட்டவணைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே குறிப்பிட்ட பெறுமதியை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

**2.2.5 சொத்துக்கள் கணக்கிடப்படாமை**

அமைச்சின் கீழ் செயல்படுத்தப்பட்ட தேசிய மருந்துப்பொருள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வு கூடத்திற்கு சொந்தமான சொத்துக்கள் 2019 மே 31 வரைக்கும் கூட கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

**3.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 288,823,697 இலாபத்தை விளைவாக தந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 57,557,675 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 231,266,022 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 385 சதவீதத்தால் அதிகரித்த பதிவு செய்தல் வருமானம் இந்த முன்னேற்றத்தை முக்கியமாக பாதித்தது.

**3.2 பிரதான செலவு விடயங்களின் போக்குப்பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டுக்கான நிர்வாக செலவுகள் முறையே ரூபா 25,497,060 மற்றும் ரூபா 60,759,242 ஆக இருந்தன மற்றும் குறிப்பிட்ட செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளய்வாண்டில் 138 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. 2516 சதவீதத்தால் அதிகரித்த வெளிநாட்டு பிரயாணச் செலவுகள் மற்றும் 1635 சதவீதத்தால் அதிகரித்த நல்ல உற்பத்தி நடைமுறையை சோதனை செய்வதற்கான செலவுகள் என்பன அதனை பிரதானமாக பாதித்திருந்தது.